2. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் குறித்த இருபத்தைந்தாவது அறிக்கை மற்றும் சமூக நலன், சத்துணவு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள், ஊனமுற்றோர் மறுவாழ்வு பற்றிய இருபத்தாறாவது அறிக்கை ஆகியவற்றைக் குழுவின் சார்பாகப் பேரவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தேழாவது முதல் நூற்று எழுபத்து நான்காவது வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

***திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2008-2009 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.